# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 சூலை 2002 பகுதி : 7

திங்கள் இதழ்

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 சூலை 2002 பகுதி : 7

## திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,
பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1

# பொருளடக்கம்


1. ஈசனார்க்கு அன்பு ஆர்? யாம் ஆர்? 229

*சுப. அண்ணாமலை*

2. குருவும் சீடரும் தமிழும் 233

*அ.சிவக்கண்ணன்*

3. தமிழ் மொழி கற்பித்தலில் எழுத்துத் திறன் 240

*பேரறிஞர் இரா. வேல்முருகன்*

4. திருக்குறளாராய்ச்சி 244

*அரசஞ்சண்முகனார்*

5. மதிப்புரை 261

# ஈசனார்க்கு அன்பு ஆர்? யாம் ஆர்?

சுப. அண்ணாமலை

மணிவாசகர் திருவண்ணாமலையில் இறைவனைச் சோதி வடிவில் காணப்பெற்றார். அவர் கண்டது மலையின் உச்சியில் ஏற்றிவைத்த தீபத்தின் காட்சி மட்டும் அன்று; அம் மலைத்தீபத்தின் காட்சி, அவரது அக அனுபவத்தில், பரஞ்சோதியின் காட்சியாக விளங்கியது. அவர் முன்பே இறைவனிடம் கொண்ட காதல், ஊற்றுக்கால் எடுத்துப்பெருகியது. அளவிலா ஆனந்தம் அடைந்தார். அதைப் பாவை நோன்புப் பெண்களின் உரையாடல் வாயிலாக விளக்குகின்றார்.

நீராடச் செல்லும் கன்னிமார், ஒரு பெண்ணின் வீட்டு வாசலில் நின்று, அவளை அழைக்கின்றனர். பலமுறை பெயர் சொல்லி அழைத்தும் அவள் எழவில்லை. அதனால் அவளைப் பரிகாசம் செய்யத் தொடங்குகின்றனர்.

"அடி பெண்ணே, நாம் இரவு, பகல் - எப்போது பேசினாலும், "என் பாசமெல்லாம் பரஞ்சோதிக்குத்தான்; என் மனம் அவனையே விரும்புகிறது, அவனை மறக்க முடியவில்லை என்று கூறுவாயே. அப்படி மாறாத அன்புகொண்டவள் போலப் பேசியதெல்லாம் வெறும்பேச்சுத்தானா? இப்போதல்லவா தெரிகிறது, உன் நேசமெல்லாம் பரஞ்சோதிக்கு அல்ல, படுக்கைக்குத்தான் என்று"

"பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
பேசும்போது, எப்போது; இப்போது ஆர் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்?"

"அவள் அணிந்துள்ள அணிகள் செவ்வையாக உள்ளன, ஆனால் அவள் சொல் செவ்வையாக இல்லை; சொல்வது ஒன்று, செய்வது ஒன்றுமாகக் கொண்டிருக்கிறாள்" என்பார், அதனைக்

குறிப்பாக, "நேர் இழையாய்" என்ற அழைப்பால் தெரிவிக்கின்றனர். படுக்கை ஓர் இன்பப்பொருளாகக் கொள்ளத்தக்கது அன்று என்பார், "இப்போது ஆர் அமளிக்கே நேசமும் வைத்தனையோ?" என்று வினவுகின்றனர். மலர் பரப்பிய மஞ்சமே ஆயினும், மகாதேவன் திருவடிக்கு அன்புவைப்போர் விரும்பத்தக்கது அன்று என்பார், "போது ஆர் அமளி" என்று படுக்கைக்கு அடைமொழி சேர்க்கின்றனர்.

இப்போது உள்ளே இருப்பவள் பேசத்தொடங்குகிறாள்.

"நேரிழையீர்! பரிகாசத்தில் இறங்கிவிட்டீர்களே! பரிகாசம் செய்யும் நேரமா இது? சொல்லால் ஏசுவதற்கும் விளையாடுவதற்கும் உரியவரா நாம்? என்று திருப்பி வினவுகின்றாள். அவள் இவ்வாறு கூறுவதற்குக் காரணம், அவள் உண்மையில், தூக்கத்தில் ஆழ்ந்துவிடாமல், தன் காதலனாம் சிவபெருமானின் பரஞ்சோதி வடிவத்தைக்கண்டு, அனுபவித்து, அது கலையும் நிலையில் இருந்ததே ஆகும். அவள் தன் தோழிமாரிடம் "பாசம் பரஞ்சோதிக்கு" என்று கூறியிருந்தது, உண்மையைத்தான். ஆதலால் இறைவனைக் கண்டு, அந்த நினைவில் மகிழ்ந்து, அந்த மகிழ்ச்சியில் "படுக்கையில் கிடக்கிறோம்" என்பதைக்கூட மறந்திருந்த அவள், தோழிமாரின் அழைப்பால், தன் நினைவு பெற்றாள். அந்நிலையில் தோழியர் ஏசுவதைப் பொறுப்பாளா?

அவர்களை, "நேர் இழையீர்" என அழைக்கிறாள். நீங்கள்தாம் நேர்மை இழைக்கவில்லை என்று இதற்கு ஒருபொருள் உண்டு. சிச்சீ! இது பரிகாசம் செய்யும் இடமா? இப்படிச் செய்யவும் உங்களுக்கு மனம் வந்ததே! என் நிலைமை என்ன என்று நாடிப் பாராமல் கேலியில் இறங்கிவிட்டீர்களே!

> ". . . . நேர்இழையீர், சிச்சீ இவையும் சிலவோ? விளையாடி ஏசும் இடம் ஈதோ?"

என் நிலைமையைப்புரிந்து என்னை எப்போதும் பாராட்டுபவர்களாகிய நீங்களா இப்படிக் கேலிபேசுகிறீர்கள் என்பாள், "இவையும் சிலவோ" என்கிறாள்.

"நான் சிவபரஞ்சோதியிடம் வைத்த அன்பில் சிறிதும் கறைந்துவிடவில்லை. படுக்கையில் கிடந்தாலும் தூங்கவில்லை. அப்படியிருக்க, நீங்கள் என்னை ஏசுவதும் பேசுவதும் ஏன்? என்பது அவள் சொல்லவரும் கருத்து.

அதைப் புரிந்துகொண்ட தோழியர், இவளைப் பாராட்டுவாராய்க் கூறத் தொடங்குகின்றனர்; "தேவர்களும் தன்னைக் காணாமல் வருந்தி, "எப்படி உண்மை இறை அனுபவம் பெற்றுப் பாராட்டுவோம்? அதைப் பெறாமல் வாழ்த்துவதும் ஏத்துவதும் பொருத்தமில்லையே! என்று கூறும்படி, கடந்து திகழும் பரம்பொருள், திருமாலும் பிரமனும் அறியமுடியாதபடி, ஞானமே வடிவமாக விளங்கும் சிவபெருமான்-சோதிவடிவாக உனக்குக் காட்சி தந்தானே? விண்ணோர்க்கும் செல்வருக்கும் சென்று தொழவும் அரியவனாய் உள்ளவன், மண்ணகத்து மனிதராகிய நமக்கு, தானே வலிய வந்து தண்ணருளைத் தருகின்றான். திருவடியின்பதை உனக்கு அளித்திருக்கின்றான். உண்மையில் அவன் யாருக்கும் எட்டாத சொரூப நிலையில் ஒளிமயமானவன் அல்லனோ? என்னே அவன் கருணை!

". . . . விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
நேசன்"

அவன் மறைந்துவிட்டானே! இப்போது எங்கு இருக்கின்றான்? சிவலோகத்தில் ஞான நடனம் புரியும் அவன், தில்லைநகரத் திருச்சிற்றம்பலத்தில் மனிதர்கள் காணும் வண்ணம், ஊனநடனம் புரிகின்றான். நாம் பார்த்து, வழிபட்டு, அன்பு செய்யும்படி, தெய்வ-மனித வடிவில், நாம் எல்லாம் பெற்றுக்கொள்ள வரம்

தந்தருளும் ஈசனாக ஆடிக்கொண்டிருக்கின்றான்.

" சிவலோகன், தில்லைச் சிற்றம்பலத்துள் ஈசனார்"

அவனுக்கு நாங்கள் அன்பர் என்று கூறிக்கொள்வதில் பெருமை கொள்கின்றோம். அவன் பெருமை என்ன? நம் சிறுமை என்ன? அவனுக்குச் செய்யத்தக்க அன்பு எத்தகையது? நினைந்து நினைந்து நெஞ்சுருகும் அன்பாகவன்றோ இருத்தல் வேண்டும்? நம்முடைய அன்பு அத்தகையது என்று கூறமுடியுமா? ஒருபோதும் முடியாது.

அவன் "யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்". நாமோ "யாவர்க்கும் கீழாம்" அடியவர்கள். அவன் இவ்வேறுபாட்டைப் பாராமல், நம்மை யாவரும் பெற்றறியா இன்பத்துள் வைத்தான்.

"ஈசனார்க்கு அன்பு ஆர்? யாம் ஆர்? ஏலோரெம் பாவாய்"

என்று சிவபெருமானிடம் தாங்கள் பெற்ற காதல் இன்பத்தை வியந்து பேசுகின்றனர்..

இவ்வனுபவத்தை விளக்கும் திருவெம்பாவை இரண்டாம் பாடல் வருமாறு:

"பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
பேசும்போது எப்போது, இப்போது ஆர் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேர் இழையாய், நேரிழையீர்
சீசீ இவையும் சிலவோ? விளையாடி
ஏசும் இடம் ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
நேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பு ஆர்? யாம் ஆர்? ஏல் ஓர் எம்பாவாய்"

# குருவும் சீடரும் தமிழும்

அ.சிவக்கண்ணன்

செந்தமிழே நறுந்தேனே
செயலினை மூச்சினை உனக்களித்தேனே
நைந்தாயெனில் நையும் என் வாழ்வே
நன்னிலை யுனக்கென்றால் எனக்குமன்றோ?

என்று தமிழுக்காகத் தம் வாழ்நாள் முழுதும் அர்ப்பணித்த தமிழறிஞர் பலர் உண்டு. அவருள் குருவும் சீடருமாக அமைந்த, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, உ.வே. சாமிநாத அய்யர் ஆகியோரின் தமிழ்ப் பணி என்றும் நிலை பெற்று நிற்பது.

## குரு

உ.வே. சா'விற்குத் தம் ஆசான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடத்து அளவற்ற பக்தி, மரியாதை. தம்முடைய ஆசானின் வாழ்க்கை வரலாற்றை இரண்டு தொகுதிகளாக எழுதியிருக்கிறார். முதன் முதலாக, உ.வே. சா'வின் தந்தை, உ.வே.சாவைத் தமிழ்கற்கும் பொருட்டு மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறார். தாம் கண்ட தம்முடைய ஆசானின் தோற்றத்தைப் பற்றிக் கூறுகையில்,

"பல காலமாகத் தவம் புரிந்து ஒரு தெய்வ தரிசனத்திற்குக் காத்திருக்கும் உபாசகனைப் போல நான் இருந்தேன். அவனுக்குக் காட்சியளிக்கும் அத்தெய்வம் போல அவர் வந்தார்" என்கிறார்.

அவருடைய வீட்டையும் தமிழ்ப்பணியையும் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"இவருடைய வீடு ஒரு கலைமகள் நிலையமாகத் திகழ்ந்தது. தம்பால் வரும் மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்வதும் தம்மைப் பார்க்க வந்த பிரபுக்களிடம் தமிழ் நூல்களிலுள்ள

அருமையான செய்திகளைக் கூறி மகிழ்வித்தலும், புதிய செய்யுட்கள் இயற்றுதலும் ஆகிய தமிழ்த்தெய்வ வழிபாடுகளே காலை முதல் இரவு நெடுநேரம் வரையில் இவருடைய வேலையாக இருந்தன".

இவர் எழுதிய நூல்களைப் பற்றிக் கூறுகையில், "இவர் எழுதிய நூல்கள் பலவற்றுள் தெரியாதவை சில. தெரிந்தவற்றுள் புராணங்கள் இருபத்திரண்டு, பிறகாப்பியங்கள் ஆறு, பிரபந்தங்கள் நாற்பத்தைந்து. தனிப் பாடல்கள் அளவிறந்தன. இவ்வளவு மிகுதியான நூல்களை இயற்றியவர் தமிழ்ப்புலவர்களில் வேறு யாருமில்லை" என்று குறிப்பிடுகிறார்.

"இவருடைய நூல்களில் பெரும்பான்மையானவை புராணங்களே. இவருடைய வாக்கால் தங்கள் ஊருக்கு ஒரு புராணமேனும் ஒரு பிரபந்தமேனும் பெற வேண்டுமென்று அக்காலத்தில் சிவஸ்தலங்களில் இருந்தவர்கள் விரும்பினார்கள். பழைய புராணம் இருந்தாலும், நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு முதலிய காப்பிய இலக்கண அமைதியுடன் செய்ய வேண்டுமென்னும் கருத்தால் பலர் அவரை மீண்டும் ஒரு புராணம் இயற்றித் தரும்படி வற்புறுத்தி வேண்டுவதுண்டு" என்றும் அறிய முடிகிறது.

திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை என்று இவர் குறிப்பிடப்பட்டாலும், அவருடைய தந்தை மதுரையும்பதியைச் சார்ந்தவர்தான். மதுரை மீனாட்சியம்மன் கோவிலிலே முத்திரைக் கணக்கராய்ப் பணியாற்றி வந்தார். கோயிலதிகாரிகளுடன் ஏற்பட்ட மன மாறுபாட்டால் வேலையை விட்டு விலகி, மனைவி அன்னத்தாச்சி அம்மாளுடன் திரிசிர புரத்துக்கு மேற்கேயுள்ள 'எண்ணெய்க் கிணறு' என்கிற ஊரிலே குடியேறினார். பிறகு அங்கிருந்து, பக்கத்திலிருந்த 'அதவத்தூருக்கு'க் குடிபெயர்ந்து, ஒரு பள்ளி அமைத்து கல்வித் தொண்டாற்றி வந்தார். அந்தக் காலத்திலேதான், அதாவது

6.4.1815 ஆம் ஆண்டு, அவர்களுக்கு ஆண்குழந்தை பிறந்தது. மதுரை ஆலவாயான் நினைவாக 'மீனாட்சி சுந்தரம்' என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள்.

இந்தக் குழந்தைதான் பிற்காலத்திலே தமிழ் இலக்கிய, இலக்கணத்திலே கரைகண்டு, பலருக்கும் அவற்றைக் கற்பித்ததோடு, பலப்பல நூல்களையும் படைத்தளித்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையாவார்.

பிள்ளையவர்களின் பதினைந்தாவது வயதில் அவருடைய தந்தை சிதம்பரம்பிள்ளை சோமரசம்பேட்டையில் இயற்கை யெய்தினார். அவர் மறைந்த ஆண்டு விரோதி ஆண்டு. தந்தையின் இழப்பினால் பாதிக்கப்பட்ட மீனாட்சி சுந்தரம்பிள்ளை, தம்முடைய துயரத்தை, விரோதியாண்டின் மேலேற்றிப் பின்வரும் வெண்பாவை இயற்றினார்.

முந்தை யறிஞர் மொழிநூல் பலநவிற்றும்
தந்தையெனைப் பிரியத் தான்செய்த - நிந்தைமிகும்
ஆண்டே விரோதி யெனுமப்பெயர் நிற்கே தகுமால்
ஈண்டேது செய்யா யினி.

தமிழ்த்தொண்டிற்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்ட மகாவித்துவான், 1876 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாள், இவ்வுலக வாழ்வை நீத்தார். அந்திமக் காலத்தில் கூட உ.வே.சாவிற்குத் திருவாசகத்தில் ஏற்பட்ட ஐயத்தினைத் தீர்த்துவைத்திருக்கிறார். ஆசானின் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியாத உ.வே.சா. விம்மி விம்மி அழுதிருக்கிறார்.

## சீடர்:

தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறடி பாயும் என்பது போல, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் சீடரான உ.வே. சாமிநாதய்யரின் சாதனைகளும் மிகப் பலவாம்.

பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை உ.வே.சா'வைப் பற்றி இப்படிக் குறிப்பிடுகிறார்.

"ஐயரவர்கள் சுமார் அறுபது ஆண்டுகளாகத் தமிழையே சிந்தித்து வந்தார்கள். தமிழ் நூல்களையே ஓதி வந்தார்கள். தமிழ் நூல்களையே போதித்து வந்தார்கள். தமிழ் நூல்களையே தேடிப் பெற்றுத் தொகுத்து வந்தார்கள். இவர்கள் இல்லத்தைத் தமிழ்த் தெய்வத்தின் திருக்கோவில் என்றுதான் சொல்ல வேண்டும்".

எவர் ஒருவர் தம் உடல் பொருள் ஆவியனைத்தையும் ஒன்றன் பொருட்டாக முற்றிலும் அப்பணித்துக் கொள்கிறாரோ அவர் அதுவாகவே ஆகிவிடுகிறார். தமிழுக்காகத் தம் உடல் பொருள் ஆவியனைத்தையும் அர்ப்பணித்துக் கொண்ட உவே.சா. போன்றவர்கள் தமிழாகவே மாறி விட்டார்கள்.

"தமிழுக்குத் தொண்டு செய்தோர் சாவதில்லை" என்று பாரதிதாசன் குறிப்பிடுவது இதனால்தான் போலும்.

1906இல் உ.வே.சா.வினுடைய அளப்பரிய தமிழ்த் தொண்டிற்காக, 'மகா மகோபாத்தியாய' எனும் பட்டம் அளிக்கப்பட்டது. அதுவரையில் வடமொழிப் புலவர்களுக்குத் தான் இந்தப் பட்டம் அளிக்கப்பட்டது. அதனையொட்டி, சென்னை மாநிலக் கல்லூரியில் ஒரு பாராட்டுவிழா நடைபெற்றது. இந்த விழாவிற்கு வந்திருந்த மகாகவி சுப்பிரமணிய பாரதியார், பென்சிலாலேயே மூன்று பாடல்களை அங்கேயே எழுதிப்படித்தார். அதில் ஒன்று,

"நிதியறியோம், இவ்வுலகத்தொரு கோடி
இன்பவகை நித்தம் துய்க்கும்
கதியறியோம் என்று மனம் வருந்தற்க!
குடந்தை நகர்க் கலைஞர் கோவே,
பொதிய மலைப் பிறந்த மொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்

துதியறிவாய், அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்குவாயே!

உ.வே.சாவின் பெருமை பற்றிக் கேள்வியுற்ற வங்கக்கவி இரவீந்திர நாத் தாகூர் (1919 ஆம் ஆண்டு) உ.வே.சாவின் வீட்டிற்கே வந்து அங்கிருந்த ஏட்டுச் சுவடிகளையும், நூல் பிரதிகளையும் கண்டு வியந்து அவருடைய பதிப்புத் திறமையைப் பாராட்டிச் சென்றிருக்கிறார்.

1937 இல் சென்னையில் நடந்த பாரதீய சாகித்ய பரீச்சத்தின் மாநாட்டிற்கு உ.வே.சாவை வரவேற்புக் குழுத்தலைவராக இருக்கச் செய்தனர். இந்த மாநாட்டிற்கு மகாத்மா காந்தியடிகள் வந்திருந்தார். உ.வே.சா, தம்முடைய வரவேற்புரையில் சங்க நூல்களில் தமிழர்களின் பெருமை எவ்வாறு கூறப்பட்டிருக்கிறது என்று சுட்டிக் காட்டினார். அதைக் கேட்ட காந்தியடிகள், "தமிழின் வடிவமாகவே இருக்கும் இவர் திருவடியில் இருந்து தமிழ்பயில வேண்டுமென்ற ஆசை எனக்கு உண்டாகிறது. அந்தச் சந்தர்ப்பம் எப்போது கிடைக்குமோ?" என்று பேசினார்.

தமிழரின் பண்பாட்டுப் பெருமையைப் பறைசாற்றும் இலக்கியங்களையெல்லாம், கறையான் அரிக்கிற ஓலைச் சுவடிகளிலிருந்த பழைய நூல்களைப் புதிய முறையில் காகிதத்திற்கு மாற்றியது உ.வே.சா. வின் மாபெரும் சாதனை.

சீவக சிந்தாமணி, மணிமேகலை, பெருங்கதை, பத்துப்பாட்டு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு, தக்கயாகப்பரணி, தமிழ்விடுதூது, புறப்பொருள் வெண்பாமாலை........ என அவர் பதிப்பித்த இலக்கியங்களின் பட்டியல் நீள்கிறது.

தனக்குப் பொருள் தெரியாமல் எந்த ஒரு நூலையும் பதிப்பிப்பதில் அவருக்கு நம்பிக்கை கிடையாது. சீவக சிந்தாமணி ஏடு, 1880இல் கும்பகோணத்தில் முன்சீப்பாக இருந்த சேலம் இராமசாமி முதலியாரிடம் இருந்தது. அது

சமணக்காப்பியம் என்பதால், அதை முழுவதும் புரிந்து கொள்ள கும்பகோணத்திலிருந்த சமணர்களை அணுகி விளக்கம் கேட்ட பிறகே, சென்னையில் பதிப்பித்தார்.

அதேபோன்று பௌத்தகாப்பியமாகிய மணிமேகலை தொடர்பாக ஏற்பட்ட ஐயங்களைப் போக்கத் தமிழ்நாட்டில் பௌத்தர்கள் கிடைக்கவில்லை. 'வீரசோழியம்' எனும் இலக்கண நூல் ஓரளவு பயன்பட்டது. சென்னையிலிருந்த மளூர் ரங்காச்சாரி என்னும் பேராசிரியர் பௌத்த நூல்களை நன்கு கற்றவர் என்பதால், அவருடைய ஆலோசனையைக் கேட்ட பிறகு 1898இல் மணிமேகலையைப் பதிப்பித்தார்.

தஞ்சை மாவட்டம் உத்தமதான புரத்தில் 19.2.1855 ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தை வேங்கட சுப்பையர் வைத்த பெயர் வேங்கட ராமன். வீட்டில் இவரை இயற்பெயரைச் சொல்லியழைக்காமல் 'சாமிநாதன்'என்றும் சுருக்கமாக, 'சாமா' என்றும் அழைத்து வந்தனர். அதைச் சாமிநாதய்யரிடமே கேட்டுத் தெரிந்து கொண்ட மீனாட்சி சுந்தரம் பிள்ளை, 'சாமிநாதன்' என்ற பெயரே நன்றாயிருப்பதாகக் கூறி அந்தப் பெயராலேயே அழைத்து வந்தார். அப்பெயரே பிற்காலத்தில் தமிழ் கூறும் நல்லுலகில் என்றென்றும் நிலை பெற்ற பெயராகி விட்டது.

16.6.1868இல் இவருக்கும் மதுராம்பாளுக்கும் திருமணம் நடந்தது. இவருடைய புலமைக்கும் உழைப்பிற்கும் பல பட்டங்களும் விருதுகளும் இவர் தேடாமலே இவரை வந்தடைந்தன.

1906இல் மகாமகோபாத்தியாயப்பட்டம்; அதே ஆண்டில் வேல்ஸ் இளவரசரும் அவருடைய மனைவியும் சென்னைக்கு வந்தபோது, உ.வே.சாவிற்குத் தங்கத் தோடா அளித்துச் சிறப்புச் செய்தார். காஞ்சி காமகோடி சங்கராச்சாரியாரால் 'தாக்ஷிணாத்ய கலாநிதி' பட்டம் வழங்கப்பட்டது. 1932இல் சென்னைப்

பல்கலைக் கழகம் இவருக்கு 'டாக்டர்' பட்டம் அளித்துச் சிறப்புச் செய்தது. ஆனால் தமிழ் ஆராய்ச்சியிலும், நூல்களைப் பதிப்பிப்பதிலும் இருந்த ஆர்வம் அவருக்குப் பட்டங்களையும் பரிசில்களையும் பெறுவதில் இருந்ததில்லை. இதைப் பின்வரும் செய்தியால் அறியலாம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்த இராமநாதபுரம் பாண்டித்துரைத் தேவருக்கும் உ.வே. சாவிற்கும் நல்ல நட்பிருந்து வந்தது. தமிழ்ச் சங்கம் வெளியிட்டு வந்த 'செந்தமிழ்' இதழில் கட்டுரை எழுதி வந்தார். சில நூல்களை வெளியிடுவதற்குப் பாண்டித்துரைத் தேவர் பொருளுதவியும் செய்ததுண்டு. இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி, உ.வே.சாவின் தமிழ்த் தொண்டினால் மகிழ்ந்து, அவருக்கு ஒரு கிராமத்தையே அளிக்க விரும்புவதாக, பாண்டித்துரைத் தேவரிடம் சொல்லியனுப்பினார். ஆனால் உ.வே.சா. மன்னரிடம் தம்மால் அப்பரிசைப் பெற்றால், நிர்வகிக்க இயலாதென்றும் அதனால் தம்முடைய தமிழாராய்ச்சி தடைப்படும் என்றும் பணிவாகக் கூறி மறுத்துவிட்டார்.

கடைசியாக, உ.வே.சா. தம்முடைய வரலாற்றை "ஆனந்த விகடன்" இதழில் எழுதி வந்தார். அது முற்றுப் பெறுவதற்குள் 1942 ஆம் ஆண்டு தம்முடைய 87வது வயதில் இயற்கை எய்தினார்.

ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் கிட்டும் சிறந்த பேறு ஒரு நல்லாசிரியர் குருவாக அமைவது. உ.வே.சாவிற்கு அப்பேறு கிட்டியது. தமிழ்க்கடலாய், எந்நாளும் தமிழாய்ந்து வந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ஆசானாக அமைந்த காரணத்தினாலேயே, உ.வே. சாவின் வாயிலாக எத்தனையோ அரிய காப்பியங்கள், கறையானுக்குத்தப்பி, தமிழர் கையில் கிட்டியது. இத்தகைய ஒரே நோக்குக் கொண்ட குருவும் சீடரும் காலப் போக்கில் சந்திக்க நேர்ந்ததால் காலம் கடந்து நிற்கிறார்கள். தமிழ் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது.

# தமிழ் மொழி கற்பித்தலில் எழுத்துத் திறன்

பேரறிஞர் இரா. வேல்முருகன்

முன் இதழ்த் தொடர்ச்சி

**கதை உருவாக்குதல்**

மாணவர்களின் கல்வித் தரத்திற்கு ஏற்பக் கதையின் தலைப்பைக் கொடுத்து எளிய சொல்லாட்சியில் கதை உருவாக்கம் செய்யச் சொல்லலாம். சான்றாக,

'பெடோக் பகுதியில் உள்ள அடுக்குமாடிக் கட்டடத்தின் கீழ்த் தளத்தில் பச்சிளங்குழந்தை ஒன்று துணியால் சுற்றப்பட்டு அனாதையாகக் கிடந்ததை...'

'அதிகாலை 5 மணியளவில் சிங்கப்பூர் விமானம் சாங்கி விமான நிலையத்தில் வந்து இறங்கிய போது...' போன்ற கதைத் தொடக்கத்தைக் கொடுத்து தனித் தனியாகவும், குழுவாகவும் மாணவர்களை அமரச் செய்து ஆர்வமூட்டும் அளவிற்குக் கதையை நீட்டிக்கச் செய்யலாம். அறிந்த தலைப்புகளை, செய்திகளை மாணவர்களிடம் கொடுக்க வேண்டும். சிங்கப்பூர் மாணவர்களுக்குக் கிராமத்துச் சூழலில் ஒரு சிறுகதையை அமைக்கச் சொன்னால் மிகுந்த இடர்ப்பாடு அடைவர். எனவே மாணவர்கள் பயிலும் நாட்டுச் சூழலைக் கருத்தில் கொண்டு எழுத்துப் பயிற்சியைக் கொடுப்பது சாலச்சிறந்தது.

சிறுகதையின் முழு வடிவத்தையும் கொடுத்துக் கதைத் தலைப்பு, கதை முடிவு, கதாபாத்திரங்களின் நிறைகுறைகள் முதலியவற்றை மதிப்பீடு செய்ய வைப்பதன் மூலமும் எழுத்துத் திறனை மேம்படுத்தலாம்.

**கட்டுரை எழுதுதல்**

இன்றைய சூழலில் சிங்கப்பூரில் மாணவர்களிடம் எழுத்தாற்றலை மேம்படுத்தக் கட்டுரைப்பயிற்சி அதிகம்

கொடுக்கப்படுகிறது. கட்டுரை என்பதற்கு உள்ளத்தில் தோன்றிய சிந்தனைகளை முறைப்படுத்தி ஒரு தொகுப்பாக விளக்குவது எனப் பொருள் கூறலாம். சுருங்கக்கூறின் மொழியறிவும் பொருளும் அடங்கியது. இதன் வகைகளாகச் சிந்தனைக் கட்டுரை, செய்தித்தாள் கட்டுரை எனப் பலவகை இருந்தாலும் அமைப்பு சார்ந்த கட்டுரைகளும், செய்முறைக் கட்டுரைகளும் சிங்கப்பூரில் அதிகம் பின்பற்றப்படுகின்றன. கட்டுப்படுத்தப்பட்ட கட்டுரைகள், வழிகாட்டிக் கட்டுரைகள், படக்கட்டுரைகள் போன்றவை அமைப்பு சார்ந்த கட்டுரைக்குள் அடங்கும். கருத்தினை மையப்படுத்தி எழுதும் கட்டுரை செய்முறைக் கட்டுரை எனப்படும். மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்க்க செய்முறைக் கட்டுரை அதிகப் பங்கு வகிக்கிறது. கட்டுரை போன்றே கடிதம் எழுதும் பயிற்சியின் மூலமும் எழுத்தாற்றலை வளர்க்க முடியும்.

**உரையாடல். வர்ணனை முதலியவற்றை விவரித்து எழுதுதல்**

தொலைபேசி உரையாடல், இணையம்வழி உரையாடல், என உரையாடல் பல வகைப்படும். மாணவர்களைக் கற்பனையாக உரையாடல் நிகழ்ச்சிகளைத் தயாராக்கச் சொல்லலாம்.

சில நேரங்களில் பிற மொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்தி எழுதும் போது ஏற்றுக்கொள்ளக் கூடிய மனநிலையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். சான்றாக ஹலோ! ஹய்! போன்ற சொற்களை அலோ! ஆய்! என்று சிறிதுமாற்றி எழுத முடியும். உரையாடல் நிகழ்ச்சிகளின் வழி மாணவர்கள் புதிய சொற்கள் பலவற்றை அறிந்துகொண்டு எழுத வாய்ப்பு ஏற்படுகிறது.

வர்ணனை என்பது நாம் பெற்ற அனுபவங்களை, கண்ட காட்சிகளை உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஊற்றெடுக்கும் வார்த்தைகளால் அலங்கரிப்பது வர்ணனை எனப்படும். மாணவர்களைச் சுற்றுலாத் தலங்களுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள கண்கவர் காட்சிகளை வர்ணனையாக அமைக்கச்

சொல்லலாம். இப்படிப்பட்ட சூழலில் போட்டி போட்டுக்கொண்டு புதுப்புது சொற்களை அமைத்து எழுதுவர். அதன் வழி எழுத்தாற்றல் மேம்படும்.

**படம் பார்த்து விளக்கி எழுதுதல்**

பட அட்டைகளை மாணவர்களிடம் கொடுத்து அவற்றை உற்று நோக்கி விளக்குவது படம் பார்த்து விளக்கி எழுதுதல் எனப்படும். பூங்கா, விளையாட்டு மைதானம், பேருந்து நிலையம், பேரங்காடி, வீடு, பள்ளி, கடற்கரை போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களைப் படமாகத் தயாரித்து மாணவர்களிடம் கொடுக்க அப்படங்கள் பற்றிய விளக்கத்தைச் சொந்தமாக அவர்கள் எழுதுவர். அப்போது புதிய புதிய சொற்களை அறிந்து கொள்வதற்குரிய வாய்ப்பு ஏற்படுகிறது. பலவகையான செய்திகளையும் அறிந்துகொள்ள முடிகிறது. சாலை விதிகளை மீறியதால் ஏற்படும் விபத்துக்கள், பொது இடங்களில் குப்பை போடுவதால், எச்சில் உமிழ்வதால் ஏற்படும் தண்டனைகள், அவசர காலங்களில் உதவிக்கரம் நீட்டுதல், முதியோரைப் பேணல் முதலியவற்றையும் படமாக்கி மாணவர்களிடம் கொடுக்கும்போது விளக்கம் எழுதுவதோடு நல்ல நெறிகளும் மாணவர்களின் மனதில் பதிய ஏதுவாகிறது.

**சுருக்கி வரைதல்**

பாடப்பகுதிகள், இலக்கிய சொற்பொழிவுகள், அறிஞர்களின் படைப்புகள் போன்றவற்றைச் சுருக்கமாகவும், கருத்தாழமிக்க தாகவும் எழுதச் சொல்லலாம். இந்தப்பகுதி மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதோடு எந்த இடத்தில் எந்த வகைச் சொற்களை அமைக்க வேண்டும் என்ற ஆற்றலும் உருவாகும். சொல் தேர்வு என்பது மாணவர்களின் எழுத்துத்திறனை மேம்படுத்துவதோடு சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் ஆற்றலும் அதிகரிக்கும்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என இறுமாப்போடு எட்டுத்திக்கும் முழங்குவதைவிட எண்ணுக தமிழில்! எழுதுக தமிழில்! என்பது தமிழை உண்மையாகவே வளர்ப்பதற்குரிய சிறந்த முறையாகும். எழுத்து என்பது ஆண்டுகள் பல கழிந்தாலும் என்றும் நிலைபெற்று நிற்கும். சங்க காலத்தைப் பொற்காலமென்று ஏன் கூறுகிறோம்? சங்கச் சான்றோர்களின் விலைமதிக்க முடியாத எழுத்தால்தானே! அத்தகைய எழுத்தை-எழுத்துத்திறனை இளம் உள்ளங்களில் பதிய வைக்க இன்று ஏராளமான ஊடகங்கள் போட்டி போட்டுக் கொண்டு தமிழ்ப் பணி செய்துவருகின்றன. சிங்கப்பூரில் தமிழ் நாளிதழான தமிழ் முரசு வாரந்தோறும் 'மொழிவளம்' பகுதியையும் 'தமிழ்ப் பயிற்சி'ப் பகுதியையும் வெளியிட்டு எழுத்துத் திறன்களோடு பிற திறன்களையும் மாணவர்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும் என அரும்பாடு பட்டு வருகிறது.

"தொண்டு செய்வீர் தமிழுக்கு துறைதோரும்
துறைதோரும் துடித்தெழுந்தே"

என்ற பாரதிதாசனின் வரிகளுக்கேற்பத் தமிழ் அமைப்புகள் தமிழை வளர்க்க அரும்பணி ஆற்றி வருகின்றன. சிங்கப்பூர் இளையர்களும் இன்று தமிழ் மீது அதிக நாட்டம் கொண்டு வருவதை அறிய முடிகிறது. மென்மேலும் எழுத்தாற்றலை வளர்த்துக் கொள்ள ஏழு வகையான முறைகள் இங்கே விளக்கபட்டிருக்கின்றன. இன்னும் புதிய புதிய முறைகள் தோன்றலாம்!

எழுத்துத் திறனில் மேம்படுவோம்
இமயம் போல் உயர்ந்து நிற்போம்
சீர்மிகுந்த தமிழை
பார் போற்றப் பாடுபடுவோம்!

# திருக்குறளாராய்ச்சி

## அரசஞ்சண்முகனார் முதல்குறள் விருந்தியுரை

தமிழ்ப்பேரறிஞர் சோழவந்தான் அரசஞ்சண்முகனார் சற்றேறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்பு வள்ளல் பாண்டித்துரைத்தேவர் அவர்களால் நிறுவப்பட்ட நான்காம் தமிழ்ச்சங்கத்தில் தமிழ்ப்பணியாற்றினார் .அது சமயம் நோய்வாய்ப்பட்ட அரசஞ்சண்முகனாருக்கு ஓராண்டு விடுப்பும் அக்காலத்திற்கு ஊதியமும் வழங்கியதுமன்றி இருநூறு வெண்பொற்காசும் அளித்து நோய்க்கு மருத்துவம் செய்து கொள்ளுமாறு புரவலர் பாண்டித்துரைத்தேவர் அவர்கள் அன்புடன் வேண்டியிருக்கிறார்கள் இந்நன்றியை என்றும் மறவேன் எனப் பேரறிஞர் அரசஞ்சண்முகனார் குறிப்பிடுகிறார்கள்

அவர்கள் திருக்குறள் முதற்பாவுக்கு எழுதிய உரை புலவர்க்கு விருந்தாகும்; அவ்வுரை குறித்து மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர், 'ஆதியகரம்' ஆதிபகவன் எனப் பிரித்துச் செவிப்புலனாகா அகரமே எழுத்துக்களுக்கு முதல் என்று முதலிற் கூறியவர் அரசஞ்சண்முகனார். இவரைப் பின்பற்றியே திரு.வி.க. போன்றோர் உணர்த்தி வருகின்றனர் என்பதும் தெளிவு எனக் குறிக்கிறார். புலவர்க்குப் புலவராக விளங்கியவர் அரசஞ் சண்முகனார். அறிவியல் கருவி கொண்டு மொழிநூல் அறிஞர் இன்று கூறும் மொழிநூல் உண்மையைப் புலவர் விளக்கியுள்ளது கண்டு தெளிக.

அவர்கள் முதல் திருக்குறளுக்கு நூறு ஆண்டுகளுக்குமுன் "செந்தமிழ்" இதழில் எழுதிய உரை ஈண்டு தரப்படுகிறது.

பொன்னேபோல் போற்றி ஆழ்ந்து கற்று நுட்பம் தெளிக.

அறத்துப்பால் - பாயிரவியல்

முதலாவது அதிகாரம் கடவுள் வாழ்த்து

அகரமுதலவெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றேயுலகு.

என்பது முதற்பாட்டு, இதற்குப் பரிமேலழகருரையினைக் காண்டிகையாக் கொண்டு விருத்தி எழுதப்படும்.

உரைப்பாயிரம் :-

இந்திரன் முதலிய .... வாழ்த்துக்கூறுகின்றார்.

கடவுள் வாழ்த்து அவதாரிகை :-

அஃதாவது ..... கூறினாரென வுணர்க.

அகரமுதல .......... முதற்றேயுலகு.

இதன் பொருள் :- எழுத்தெல்லாம் அகரமுதல- எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடைய; உலகு ஆதிபகவன் முதற்று - அது போல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து; என்றவாறு.

இது தலைமைபற்றி வந்த எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற்பிறத்தலானும் ஆதிபகவற்குத் தலைமை செயற்கை யுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங் கொள்க. தமிழெழுத்துக்கேயன்றி வடவெழுத்துக்கும்முதலாதல் நோக்கி எழுத்தெல்லாம் என்றார். ஆதிபகவன் என்னும் இரு பெயரொட்டுப் பண்புத்தொகை வடநூல் முடிபு. உலகென்றது ஈண்டு உயிர்கள் மேனின்றது. காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின் ஆதிபகவன்

முதற்றே என உலகின்மேல் வைத்துக்கூறினார். கூறினாரேனும், உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக் கொள்க. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. இப்பாட்டான் முதற்கடவுளது உண்மை கூறப்பட்டது.

## விருத்தியுரை

இனி எந்நூலையுரைப்பினும் அந்நூற்குப் பாயிரமுரைத்தலே மரபாகுமாதலால் அஃதுரைக்கற்பாற்று.

அப்பாயிரம் பொதுவும் சிறப்புமென இருவகையினாகும்; அவற்றுட் பொதுப்பாயிரம் எல்லா நூன்முகத்தும் வேறுபாடின்றி ஒருபடித்தாந்தன்மைத் தாகலின் இலக்கண நூலானுணரப்படு மாகலான் அஃதொழித்து ஏனைச் சிறப்புப் பாயிரமே ஈண்டு உரைக்கப்படும்.

அப்பாயிரத்தான் இந்நூலையரங்கேற்றுங்காலை அவைக்களத் திருந்துகேட்ட நல்லிசைப்புலவரும் அவர்க்குப் பிற்காலத்திற் சங்கமேறிய நல்லிசைப் புலவரும் அவர்க்குப் பிற்காலத்திற் சங்கமேறிய நல்லிசைப்புலவருட் சிலரும்பாடிய திருவள்ளுவ மாலையேயாம்.

அத்திருவள்ளுவமாலைக்குச் சரவணப்பெருமாளையர் செய்த உரையினைக் காண்டிகையாகக் கொண்டு இந்நூலிறுதியில் விருத்தியெழுதப் படுமாகலின் ஈண்டைக்கு வேண்டுவ மாத்திரையே அதனுட்கொண்டு - ஆக்கியோன் பெயர் முதலாயவற்றை முறையே கூறப்படும்.

"திருத்தகு தெய்வத்திரு வள்ளுவரென" அசரீரி கூற்றாகவும் "வள்ளுவ"னென நாமகள் கூற்றாகவும் இருபுலவரும் 'மன்புலவ'னென இறையனாரும் நான்முகத்தோன் கூறெனக் கொண்டு 'நான்முகத்தோன் அயனென உக்கிரப்பெருவழுதி

முதலாயினாரும் "வள்ளுவனா"ரெனக் கபிலர் முதலாயினாரும் "வாலறிவினா"ரெனப் பரணரும் "தானேமுழுதுணர்ந்தோ",னென நக்கீரனாரும் "தே"வென மூலனாரும் "வள்ளுவ"ரெனச் சீத்தலைச் சாத்தன் முதலாயினாரும் "முதற்பாவல" ரென ஆசிரியர் நல்லந்துவனார் முதலாயினாருந் "தெய்வ"மெனக் கீரந்தையார் முதல் ஆயினாரும் "மாதானுபங்கி மருவிலார் செந்நாப் போதா" ரென நல்கூர் வேள்வியாரும் "பெருநாவல"ரெனத் தொடித்தலை விழுத்தண்டினாரும் "திருவள்ளுவ"ரென வெள்ளிவீதியார் முதலாயினாரும் "பிணக்கிலாவாய்மொழியா" ரென உருத்திரசன்ம கண்ணரும் "ஏதமிலா" ரெனப் பெருஞ்சித்திரனாரும், "புலவ"ரெனச் செங்குன்றூர்க்கிழாரும், "தேவிற்சிறந்தா"ரென முதுகூற்றனாரும், "தேவ"ரெனச் செயிர்க் காவிரியார் மகனாரும் "வள்ளுவரோ டொக்கவிருக்கவுருத் திரசன்ம" ரெனவும் "மறந்தேயும் வள்ளுவ னென்பானோர் பேதை"யெனவும் "வல்லாரார் வள்ளுவரல்லா" லெனவும் "முதற்பாவலரெப்பா வலரினுமில்லெனவும் "செந்நாப்போதார் புனற்கூடற்கச்" செனவும் பிறவும் உரைத்தவாற்றான் அவர் பெருமையுணரப்படும்.

"முதல் நான்மறைபாடா இடைப்பாரதம் பகர்ந்தேன் பின்வள்ளுவன் வாயதென்வாக்"கெனவும் "நான்மறைப் பொருளைத் தந்துரைத்தநூ"லெனவும் "சாற்றிய பல்கலையுந்தப்பா வருமறையும் போற்றியுரைத்த பொருள் எல்லாந்தோற்ற" வெனவும் "வேதப்பொருளாய் மிகவிளங்கி" யெனவும் "பாரத சீராமகதை மனுப்பண்டைமறை நேர்வன" வெனவும் "இந்நான்கு முன்பறியச் சொன்ன முதுமொழி நூலுள்ளவாறென்றுலகங் கொள்ளமொழிந்தா"ரெனவும் "வேதவிழுப் பொருளையோத"வெனவும் "வேதப்பொருளைத் தமிழாலுரை செய்தா" ரெனவும் உரைத்தவாற்றான் மறையும்

மறைப்பொருளின் முரணாது தோன்றிய பாரதம் சீராமகதை மனு அகப்பொருள்நூல் புறப்பொருள்நூல் முதலிய பிறவும் தாமே முழுதுணர்ந்து அவற்றின் வழித்தாகச் செய்தாரென வழியுணரப்படும்.

"வையத்தாருள்ளுவவெல்லாமளந்தா"ரெனவும் "அகலிடத்தோரெலாந் தேர்ந்து தெளிய" வெனவும் "அகிலத் தோருள்ளிருணீக்குமொளி"யெனவும் "வானின்று மண்ணின்றளந்த"தெனவும் பிறவும் உரைத்தவாற்றான் இந்நூற் பொருள் முதனூலாகிய வேதப்பொருளேயாதலானும் அம்முதனூல் வான் உலகத்தும் வழங்கலானும் நூற்பொருட் கெல்லை இவ்வுலகேயன்றி ஏனைய உலகுமாமென்பதூஉம் 'மும்மலை' முதலாய "தாமுடையமன்னர் தடமுடி மேற்றாரன்றோ" என்றமையான் நூற்கெல்லை "வண்புகழ் மூவர்தண் பொழில் வரைப்" பாய தமிழ்நாடாமென்பதூஉ முணரப்படும்.

"வள்ளுவன்வாய"தெனவும் "வள்ளுவன்வாய்ச்சொல்" லெனவும் "முப்பொரு"ளெனவும் "குறட்பா"வெனவும் "குற"ளெனவும் "முப்பா"லெனவும் "பொய்யாமொழி"யெனவும் "வாயுறை வாழ்த்"தெனவும் "வள்ளுவர் வெண்பா"வெனவும் "பிணக்கிலாமொழி"யெனவும் "குறள்வெண்பா"வெனவும், "வள்ளுவர் பொரு"ளெனவும், "உள்ளிருணீக்கும் விளக்"கெனவும் "உள்ளக் கமலவெங்கதி" ரெனவும் "உள்ளிருக்கு மொளி"யெனவும் "வள்ளுவர்பாட்"டெனவும் பிறவுமுரைத் தமையான் நூற்பெயரும் பெருமையுமுணரப்படும்.

வள்ளுவர்சொல் வள்ளுவர் பாட்டு வள்ளுவர் பொருளென்றாற்போலப் பிற்காலத்தார் திருவள்ளுவப் பயனெனவும் வழங்குப. "தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார் "மூன்றினு முழங்கு" மென்றார். சொல்பற்றி

வள்ளுவரென்பது கருத்தனாகு பெயராய் நூலையுணர்த்துமென் பாருமுளர், அது பொருந்தாமை தொல்காப்பிய விருத்தியுட் காண்க.

"செய்யாமொழிக்கும் பொய்யாமொழிக்கும் பொருளொன்றே" யெனவும் "ஆரியம்வேதமுடைத்துத் தமிழ்குறட்பாவுடைத்" தெனவும் "நான்முகத்தோன்றந்த நூ" லெனவும் "அந்தாமரைமேலயன்றந்தா" னெனவும் உரைத்தமையான் நூற் பெருமையுமுணரப்படும். "பரந்தபொருளெல்லாம் பாரறிய வேறு தெரிந்து திறந்தோறுஞ் சேரச் சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளக்கி" னாரென்றமையானும் பிறவாற்றானுஞ் "சாற்றிய பல்கலையும் தப்பாவருமறையும் போற்றியுரைத்த பொரு ளெல்லாந் தோற்ற" தொகுத்தியாத் தாரென யாப்புணரப்படும்.

"முப்பாலினாற்பான் மொழிந்தவ" ரென்றமையானும் பிறவற்றானும் நுதலிய பொருளற முதனான்குமா மென்பதுணரப்படும். "நற்பலகையொக்க விருக்கவுருத்திரசன்ம" றென்றமை யானும் "வள்ளுவர் தம் வாயாற்கேளாதன வெல்லாங்கேட்டு" என்றமையானும் உருத்திரசன் மருஞ்சங்கப்புலவருங் கேட்டாரெனக் கேட்போருணரப்படும்.

"தமிழ்ப்புலவராய்க் கேட்கவீற்றிருக்கலா"மெனவும் "உள்ளமுருக்கு"மெனவும் "எப்பொருளும் யாரும் இயல்பினறிவுற"வெனவும் "ஆய்தொறுமுறுமறி"வெனவும் "இம்மைமறுமையிரண்டு மெழுமைக்குஞ் செம்மை நெறியிற் றெளிவு பெறமும்மையின் வீடவற்றினான்கின் விதிவழங்க" வெனவும் "உள்ளிருள்நீக்கு"மெனவும் "சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினியவந்தவிரு வினைக்குமாமருந்து" எனவும் பிறவுமுரைத்தவற்றாற் பயனுணரப்படும்.

கடைச்சங்கத்தார் பாடினமையான் அவரது காலமென்பதூம்

உக்கிரப்பெருவழுதி பாடினமையான் அவனது களனென்பதூஉ முணரப்படும்.

"இன்பம்பொருளறம் வீடென்னுமிந்நான்கு - முன்பறியச் சொன்ன முதுமொழிநூன் மன்பதைகட் - குள்ளவரிதென்றவை வள்ளுவருலகங் - கொள்ளமொழிந்தார்குறள்" என்றமையானும் பிறவாற்றானும் காரணம் உணரப்படும். தன்னாசிரியன் முதலாய மூவருளொருவரன்றிப்பிறர் பலர் பாயிரங்கூறினார்; செய்யுளாதலின், குமாரதெய்வத்தின் கூறாக மணிக்காலறிஞராகிய வணிகர் மரபிற்றோன்றி அவையத் துத்தலைவராய்க் கேட்ட உருத்திரசன்மர் சாபத்தால் வாய்வாளாமையுடையராகலிற் பாயிரங் கூறிற்றிலர்.

இந்நூல் சங்கத்தாரால் கீழ்க்கணக்கெனக்கொண்டு போற்றப் பட்டது என்னை? "தலைச்சங்கம் இடைச்சங்கங்கடைச்சங்கமென மூன்று சங்கம்நிறீ இயினார் பாண்டியர்கள்; அவற்றுட் கடைச்சங்க மிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியாரும் சேந்தம் பூதனாரும் அறிவுடையரனாரும் பெருங்குன்றூர் கிழாரும் இளந்திருமாறனும் நல்லந் துவனாரும் மருதனிள நாகனாரும் நக்கீரனாருமென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின் மரென்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன கூத்தும் வரியும் பேரிசையும் சிற்றிசையும் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் பதினெண்கீழ்க்கணக்கு மென்றித் தொடக்கந்தன" வென்று களவியலுரைப்பாயிரங் கூறியது கொண்டுணரப்படுமாதலின் "நாலடி நான்மணி நானாற் பதைந்திணைமுப் பால்கடுகங்கோவை பழமொழி மாமூல இன்னிலை காஞ்சியுடனேலாதி யென்பவே - கைந்நிலையவாங் கீழ்க்கணக்கு" என்றாராகலின் பதினெண்கீழ்க் கணக்கினுள் முப்பாலாகிய குறளுமொன்றென்பதுணரப்படும்.

இனி இக்கணக்கென்பது என்னையெனின் "மேல்கீழ்க்கணக்கெனவிருவகைக் கணக்கே" "மேற்கணக்கெனவுங் கீழ்க்கணக்கெனவும் பாற்படும் வகையாற் பகர்ந்தனர் கொளலே" எனவும் அகவலும் கலிப்பாவும் பரிபாடலும் பதிற்றைந்தாதி பதிற்றைம்பதீறாமிகுத்துடன் றொகுப்பது மேற்கணக்கெனவும் வெள்ளைத்தொகையு மவ்வகையென் பெறினெள்ளறு கீழ்க்கணக்கெனவுங் கொளலே" என்றும் "ஐம்பது முதலாவைந்நூறீறா யையவகைப்பாவும் பொருணெறிமரபிற்- றொகுக்கப்படுவது மேற்கணக்காகும்" என்றும் "அடிநிமிர்வில்லாச் செய்யுட்டொகுதியறம் பொருளின் பமடுக்கியவ்வத் திறம்படவுரைப்பது கீழ்க்கணக்காகும்" என்றுங் கூறுமாற்றானறிக. இனிக்கீழ்க்கணக்கிற்கு அவ்வகை யெண்பெறினென்றதல்லதுஇத்துணைத் தென்றுரையாமையானும் அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதியென எண்ணின்றியுரைத் தமையானும் இனியவை முதலாயின ஐம்பதிற்குறைந்தும் இந்நூல் ஐந்நூற்றின் மிக்கும் வந்தனவென்க. இது சின்மென் மொழியாற் றாயபனுவலோடு அடிநிமிர்வின்றிச் செய்யப்பட்டமையின் அம்மையெனவும் படும், என்னை, "சின்மென் மொழியாற்றாய பனுவலோ -டம் மைதானேயடி நிமிர்வின்றே" என்றாராதலின். இனி முப்பாலெனப்பலர் பெயர் கூறினமையானும் "அறந்தகளியான்ற பொருடிரியின் புஞ்சிறந்தநெய்" யென்றமையானும் இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பாலுடைத் தென்றுணரப்படும். "முப்பாலினாற் பான்மொழிந்தவ" ரென்றும் "வீடொன்றுபாயிர" மென்றுங் கூறினமையான் ஏனையவீட்டுப் பாலுந்துறவறமாகிய காரணத்தாலுணருமாறு அறத்துப்பாலுட் பாயிரத்தினுந் துறவறத்தினுங் கூறப்பட்டதென்றுணர்க. ஐயாறுநூறுமதிகார மூன்று"மெனவும் "ஆயிரத்து முந்நாற்று முப்பதுங்குறளு"

மெனவும் "குறள் வெண்பாவிற் சிறந்திடுமுப்பா"லெனவுங் கூறுமாற்றான் இந்நூல் நூற்று முப்பத்து மூன்று அதிகாரமும் ஒவ்வோரதிகாரத்துக்குப் பத்தாக ஆயிரத்து முந்நூற்றுமுப்பது குறள்வெண்பாவுடைத் தென்றுணரப்படும். சிறுமேதாவியாரும் மதுரைப்பெரு மருதனாரும் பாடிய பாட்டால் இந்நூலுள் அறத்துப்பால் முப்பத்தெட்டதிகாரமும் பொருட்பால் எழுபததிகாரமுங் காமத்துப்பால் இருபத்தைந்ததிகார முடைத்தென்றுணரப்படும். தொடித்தலை விழுத்தண்டினார் பாட்டால் அறத்துப்பால் நான்கியலும் பொருட்பால் ஏழியலும் காமத்துப்பால் மூன்றியலு முடையவெனவும் எறிச்சலூர் மலாடனார் பாட்டாற்பாயிரவியல் நான்கும் இல்லறவிய லிருபதும் துறவறவியல் பதின்மூன்றும் ஊழியல் ஒன்றுமென அறத்துப்பால் முப்பத்தெட்டதிகார முடைத்தெனவும், போக்கியார் பாட்டால் அரசியல் இருபத்தைந்தும் அமைச்சியல் பத்தும் அரணியல் இரண்டும், பொருளியல் ஒன்றும் படையியல் இரண்டும், நட்பியல் பதினேழும், குடியியல் பதின்மூன்று மெனப் பொருட்பால் எழுபத திகாரமுடைத்தெனவும், மோசி கீரனார் பாட்டால் ஆண்பால் கூற்றியல் ஏழும் பெண்பாற் கூற்றியல் பன்னிரண்டும் இருபாற் கூற்றியல் ஆறுமெனக் காமத்துப்பால் இருபத்தைந்ததிகார முடைத்தெனவுமுணரப்படும். ஆசிரியருக்கு முன்பு அவர்கருத்துணர்ந்து பாடிய நல்லிசைப் புலவருரைத்தன கொள்ளாது "தருமர்மணக்குடியார் தாமத்தர் நச்சர் பரிமேலழகர் பருதி திருமலையர், மல்லர்கவிப்பெருமாள் காளிங்கரென இந்நூற்குரை கண்ட பதின்மருட் பலர்தாந்தம் வேண்டுமாற்றானே பொருட்பாலை மூன்றியல் எனவும் காமத்துப்பாலை யிரண்டிய லெனவும், அதனையே மூன்றியலெனவும் பகுத்துரை கூறினார். இதுவன்றி ஒவ்வோரதிகாரத்திலும் முறைப்படநின்ற குறட்பாக்களையுந் தாந் தாம் வேறு வேறு முறைகொண்டு,

பிறழவைத்தார். அவையெல்லாம் ஆசிரியர் கருத்தன்றென்க. அப்பதின்மருரையுட் பல இக்காலத்திறந்தன. இருப்பவற்றுட் பரிமேலழகருரையே சிறப்புடைத்தாதலின் அதனைக் காண்டிகையாகக் கொண்டு அவ்வுரையுட் பொருந்தாமை மறுத்து ஏனையவற்றோடு விரிப்பனவிரித்து இவ்வுரையெழுதப்படும்.

அறத்துப்பால், அறத்தையுணர்த்தும் பாலெனவிரியும். பாலென்பது, நூலது பகுதி, பாயிரவியலென்பது அறத்தினது பாயிரத்தினியலையுணர்த்தும் பகுதி. இயல், இயலையுணர்த்தும் பகுதிக்காயினமையின் ஆகுபெயர். அறத்தின் பாயிரமாவது, அறம் இத்தன்மைத்தென்றுணர் தற்கின்றியமையாக் காரணமாய் அதன் பெருமையையறிவிப்பது. வெற்றிக்குக் காரணமாய படைச் செருக்கின் பெருமையெனப் பொருள்படுமாறு பாயிரங்கூறிப் "படைத்தொக்காலென்செய்ப" என்றார் பழமொழியிலும். அப்பாயிரம் பல்வகையாயினும் ஏனையவுந் தம்முளடங்குஞ் சிறப்புடையவாய கடவுள் வாழ்த்தும் வான் சிறப்பும் நீத்தார் பெருமையும் அறன் வலியுறுத்தலுமென நான்கே இந்நூலிற் கூறப்பட்டன. இந்நான்கும் நூற்குப் புறவுரையாகிய பொதுப்பாயிரமுஞ் சிறப்புப்பாயிரமும் போலாது நூனுதலிய பொருளில்அறத்தின் பகுதியாகவே முடிதலிற் பிறராற் கூறப்படாமல் நூலினகத்துறுப்பாக ஆசிரியராற் கூறப்பட்டன. முதலாவது அதிகாரம் கடவுள் வாழ்த்து என்பது, முதலாவதிடமாகிய கடவுள் வாழ்த்தின் இயல்புணர்த்தும் நூற்பகுப்பென விரியும். கடவுள் வாழ்த்துல் கடவுளை வாழ்த்தலாகிய ஒழுக்கம். கடவுளென்றது "சார் பினாற்றோன்றாது தானருவாயெப்பொருட்குஞ்சார்"பென நின்று, பிறவெல்லாம் கடந்த பொருளை, ஈண்டு, உள்விகுதி இயவுளென்பதன்கட்போல வினைமுதற் பொருளுணர்த்திக் கடந்த பொருளையுணர்த்திற்று. அதிகாரம்-இயல். அதிகாரங்கட்கு, இயல்பொதுமொழியும்

இயல்கட்குப்பால் பொது மொழியுமாக நிற்றலின் முதலாவது அதிகாரங்கடவுள் வாழ்த்தெனற்கு, இந்நூலுள் அறத்தை யுணர்த்துமிடமும், அறத்தின்பகுதியுட் பாயிரவியலை யுணர்த்துமிடமும், பாயிரவியலுட்கடவுள் வாழ்த்துணர்த்துமிட முமாகிய முதலாவதிடமெனப் பொருள் கொள்க. இந்நூல் நுதலிய பொருள் மூன்றனுள் அறம், இம்மை, மறுமை, வீடென மூன்றும் பயத்தற் சிறப்பிற்றாய் ஏனைய பொருளின்பங்கட்குக் காரணமாக நிற்றலின் முன் வைக்கப்பட்டது. ஏனைய அறத்து வழிப்படூஉந் தோற்றத்தவாகலிற் பின் வைக்கப்பட்டன. அவற்றுள் பொருள் இம்மை மறுமை என விரண்டும் இன்பம் இம்மையென ஒன்றும் பயத்தலானும், இன்பத்திற்குப் பொருளுங் காரணமாகலானும் அம்முறையே பொருள் முன்னும், இன்பம் பின்னுமாயின. அறத்தின் பகுதி நான்கனுள் இல்லறந்துறவற மென ஏனை மூன்றுமுணரற்குப் பாயிரங் காரணமாகலின் அது முன்னும் ஏனைய பின்னுமாயின. பாயிரத்தின் அதிகாரம் நான்கனுள் வான்சிறப்பு முதலாயின பிறவற்றுக்குக் கடவுளே காரணமாகலின் அவ்வாழ்த்து முன்னும் ஏனைய பின்னும் வைக்கப்பட்டன.

உரைப்பாயிரத்தில் அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன வொழிதலுமாமென்றாரேனும் அந்நூல் சொல்லியவற்றுள் அக்காலத்திற்கேலாதன ஒழித்துச் சொல்லாதவற்றுள்ளேற்பன கொண்டு உயர்ந்தோர் பலரு மெழுதியவாற்றானொழுகும் உலக நடையையும், விதிவிலக்குள மைத்துக் கொள்க. இது பரிமேலழகர்க்கு முடன்படாதலை "உலகத்தோடொட்ட" என்னுங் குறளில் அவருரைத்த வாற்றானறிக. தேவர் கோட்ட முதலியவற்றுள்ள பொருளைப்பிறர் தமவென வெளவியவழி அறிந்தோர் அரசர்க்குணர்த்தும் வழக்குப் போல்வன பேரறம் விளைத்தலானும், அங்ஙனமுணர்த்தாவழிப் பெருந்தீங்கு விளைத்தலானும்

"அவனை முறைகாக்குமுட்டாச் செயி" னெனவும், "அல்லற்பட்டாற்றா தழுத கண்ணீரன்றே, செல்வத்தைத் தேய்க்கும்படை" எனவும் கூறினாராகலின் ஒப்பநாடியதற்குத் தக ஒறுத்தலாகிய தண்டம் அறம் விளைத்தலும், அங்ஙனஞ் செய்யாமை தீங்குவிளைத்தலும் உணரப்படுமாகலாலும், வழக்குந்தண்டமும் உலகநெறி நிறுத்தற் பயத்தவாவதல்லது ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதிபயத்தற் சிறப்பிலவெனும் அதனால் அவற்றை யொழித்தாரெனலும் பொருந்தாமை காண்க. இனித் தெய்வப்புலமைத் திருவள்ளவனார் அவற்றைக் கூறாமையென்னையெனின், அரசர் துணையின்றியும் நிகழுமொழுக்கமாகிய அறம்போலன்றி வழக்குந் தண்டமுமாகிய அறங்கள் அவரது துணைகொண்டே நிகழுமியல்பினவாகலின் அவற்றை யறத்துப்பாலுட் கூறாது அரசியலும் பிறவியலுங்கூறும் பொருட்பாலுட் சில விதந்தும் பல உய்த்துணரவைத்துங் கூறினார் என்க. இங்ஙனமே ஒழுக்கத்துள்ளும் விரிவஞ்சிப் பலவிதந்து கூறாமல் உய்த்துணர வைத்தார். இவ்வாறு பரிமேலழகரும் அறத்துப்பாலிறுதியி லுரைத்தல் காண்க. இனித் தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட சிறுபான்மையாகிய சிறப்பியல்பு ஒழித்தாரெனலும் பொருந்தாது. என்னை? ஒழுக்கமுடைமை முதலிய வதிகாரத்துள் "மறப்பினுமோத்துக் கொளலாகு மென்றாற்போல சில விதந்தும் சில உய்த்து உணரவுங் கூறுமாற்றான். இக்கருத்தான் அன்றே எல்லாப்பொருளும் இதன்பால் உள இதன்பால் இல்லா எப்பொருளும் இல்லை" என்றார் தமிழ் நாகனாரும். இனி வழக்குந் தண்டமுமென வவற்றைப் பொருட்பாலுளடக்கலும், நால்வகை நிலையை இல்நிலை துறவுநிலையென விரண்டாகப் பகுத்தலுந் தமிழ் நூன்முறை; நுதலிய பொருள் வேதப் பொருளே யாயினும் ஆசிரியர் வடநூலார் வழக்குப்பற்றி

யோதாது, பெரும்பான்மை தமிழ் வழக்குப்பற்றியே யோதினாரென்க. இது "வேதப்பொருளை விரகால் விரித்துலகோர் ஓதத்தமிழாலுரை செய்தா" ரெனவும், "பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு, தெரிந்த திறந்தோறுஞ் சேரச் சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல், வல்லாரார் வள்ளுவரல்லால்" எனவுங் கூறுமாற்றானுணரப்படும்.

இனி அன்பின்றி இல்லறமும் அருளின்றித் துறவறமும் நிகழாமையானும் அன்பே அருட்குக் காரணமாதல் "அருளென்னும் அன்பீன்குழவி" யென்றமையானுணரப்படு மாகலானும் துறவறத்திற்கு இல்லறங்காரணமாதல் பெறப்படலின் அக்காரணகாரிய முறையின் இல்லறம் முதற்கட் கூறப்பட்டதன்றிக் கற்புடைமனைவியோடுஞ் செய்யப்படுங் காரணத்தானன்று. இல்லறம் துணையோடும் ஏனைய துணையின்றியுஞ் செய்தலான் அக்காரணத்தால் இல்லறம் முற்கூறப்பட்டதென்றார்க்குத் துணையோடு செயலினுஞ் துணையின்றிச் செயலே சிறந்தமையின் துறவறமே முதற்றாதல் வேண்டும். துணையோடு செயலே சிறந்ததெனின், மூன்றாவதுநிலை துணையோடு செயலுமுடைமையானும் அந்நிலை துறவுள் அடங்குமாகலானும் இல்லறத்தோடு ஒப்பத்துறவறமு முதற்றாதல் செல்லும். இவ்வாற்றானது காரணமாகாமையறிக. இருவகையறமு முற்றுதற்குக் கடவுள் வாழ்த்தாகிய அறமே சிறந்த காரணமாகலின் அவற்றைக் கூறலுற்றார்க்கு முதற்கட் கூறப்படுவது கடவுள் வாழ்த்தன்றிப் பிறிதின்மையின் அம்முறை பற்றிக் கடவுள் வாழ்த்து முற்கூறப்பட்டதன்றி எடுத்துக்கொண்ட இலக்கியம் இனிதுமுடிதற் பொருட்டுக் கூறப்பட்டதன்று. கடவுளை வாழ்த்தாவழி ஏனைய அறங்கள் பயன்படாமையைக் கற்றதனாலாய

பயனென்னெனவும் மனக்கவலை மாற்றலரிதெனவும் பிறவாழி நீந்தலரிதெனவும் பிறவுங் கூறலானுணர்க.

இவ்வாழ்த்து இலக்கிய முடிதற்பொருட்டுக் கூறப்பட்டதாயின், "ஆயென்பொருளும் வாய்ப்பக்காட்டல் பாயிரத்தியல்பே" யென்றதூஉ மன்றி ஒருசாராசிரியர் சிலவேறினாலும் பெறப்படு மாமுன்னைப் பெயர் எனவும் கூறினாராகலின், ஆக்கியோன் பெயர் முதலிய எட்டேயன்றிப் பிற சில கூறினுங் குற்றமாகாமையானும், "வணக்கமதிகாரமென்றிரண்டுஞ் சொல்லிச் சிறப்பென்னும் பாயிரமாஞ்சீ" ரென்றமையிற் கடவுள் வணக்கமுஞ் சிறப்புப்பாயிர மெனப்படுதலானும் ஆக்கியோன் பெயர் முதலியனபோலன்றிக் கடவுள் வணக்க முதலாகிய சில ஆக்கியோனாலுங் கூறப்படுமாகலானும் அவ்வணக்கந்தன் பொருட்டு மாணாக்கர் பொருட்டுங் கூறப்படுவதொன்றாகலானும் நூலினகத்துறுப்பாகாது புறத்துறப்பாகவே நிற்றல் வேண்டும். அங்ஙனமின்றி அகத்துறுப்பாகிய அறத்துப்பாலின் முதற் பகுதியாகிய பாயிரவியலின் முதற்பகுதியாக நின்று ஏனைய அறங்கள் உணர்த்தும், பிற அதிகாரங்கள் போலவே கடவுளை இல்பொருளென மயங்கலும் இல்பொருளோ உள்பொருளோ வென ஐயுறலுமின்றித்துணிதலுந் துணிந்து நினைதல் முதலாயின செயலுமாகிய வாழ்த்துவகையும் வாழ்த்தலானெய்தும் பயனும், வாழ்த்தா வழிப்படுங்குற்றமு முணர்த்தலின் ஒழுக்கவகையுள் முதன்மைத்தாயது அறமாதலுணர்க. பலசமயத்தாருந் தாந்தாமுணர்ந்தவாற்றான் வேறுவேறு கொள்ளினும் அப்பொருள் ஒன்றேயன்றிப் பலவின்மையின் இக்கடவுளென ஒருவரையேனும் பலரை யேனுஞ்சுட்டிச் சிறப்பு வகையாற் கூறாது நன்றென எப்பாலவரும் இயைய மூவரேயன்றிப் பிற தெய்வமுமாகி நின்ற கடவுளை வாழ்த்தும் ஒழுக்கத்தைப் பொதுவகையான் உணர்த்தல் இவ்வாசிரியர் கருத்தென்க.

குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொருட்கு அவற்றான் மூவராகிய கடவுளோடியைபுண்டாயினும் அம்மூன்று பொருளையும் பொதுவகையாற் கூறாது அறம் பொருளின்ப மெனச் சிறப்புவகையாற் கூறலுற்றார்க்கு அங்ஙனமே அம்மூவரையுஞ் சிறப்புவகையாற் கூறலே முறை. அங்ஙனமன்றி அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரெனல் ஆசிரியர் கருத்தாகாமை காண்க.

இலக்கிய முடிதற்பொருட்டு மங்கலவாழ்த்துக்கூறல் ஆன்றோர் வழக்கேயாதலின் இந்நூலகத்தும் அது வேண்டுமாலெனிற் கவிதான் வழிபடுகடவுளையாதல் ஏற்புடைக் கடவுளையாதல் பயன்குறித்தாயினும் இன்றியாயினும் பிறர்க்குப் புலனாகாவாறு அகத்துவாழ்த்தலே நியமமாகலானும் அவ்வொழுக்கத்தை மாணாக்கருங்கடைப்பிடித் தொழுகுமாறு புறத்தே செய்யுளானும் வாழ்த்தல் நியமந்தப்பலானும் அது தொல்காப்பியனார் செய்யுளான் வாழ்த்தாமையானுணரப்படுமாக லானும் நீத்தார் பற்றுவிடற்குப் பற்றற்றான் பற்றினைப் பற்றலன்றி வீடெனினும் பயன்வேண்டிப் பற்றாராகலின் வள்ளுவனார் இலக்கிய முடிதற்பயன்வேண்டி வாழ்த்தினாரெனின் அவர் பெருமைக்கேலாமையானும் பயன்வேண்டாது ஆன்றோராசாரம் பாதுகாத்தற்பொருட்டு அகத்தே வாழ்த்தினும் "ஒன்னார்த் தெறலுமுவந்தாரையாக்கலு மெண்ணிற்றவத்தான்வரு" மென்றாராகலின் அரியவாயினும் பெரியார்க்கு எளிதில் முடிதல் இயல்பாகலானும் ஆசிரியர் அகத்தியனார் தொல்காப்பியனார் முதலாய அறிவரைப்போன்றே வள்ளுவனாரும் மறுவில் செய்தி மூவகைக் காலமு முடையராகி அகத்தின் கடவுளை முக்காலத்தும் வாழ்த்தும் இயல்புடையராகலானும் இவ்வியல்புண்மை ஒழுக்கவகையுள் முதன்மைத்தாகக் கொண்டு கூறிய கடவுள் வாழ்த்ததிகாரத்தானு முணரப்படுமாகலானும்

ஞானபூரணராகிய திருவள்ளுவனார் ஆசிரியர் தொல்காப்பியனார்போல இலக்கிய முடிதற்காரணமாய மங்கல வாழ்த்தைச் செய்யுளாற் கூறாது ஆன்றோராசாரந்தப்பா வண்ணம் அகத்துக்கூறினாரெனக் கொள்க. மங்கலவாழ்த்தில்லா வழி நூன் முற்றாதென்பது தேற்றமாகலானும் இந்நூல் முற்றினமையானும் ஆசிரியர் நூற்குப் புறமாக அகத்தே வாழ்த்தினாரென்பது உய்த்துணரப்படும்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

இப்பாட்டு என்னுதலிற்றோவெனிற் கடவுள் காட்சியனுமாத்தானுந் தாமேயுணர் பொருளன்மையின் மறைமுதலாய நூலுட் கூறப்பட்ட அப்பொருளை அநுமான அளவையானுமுணர்த்தி வலியுறுத்துதல் நுதலிற்று என்பது. இதன் பொருள் எழுத்துக்க ளெல்லாம் அகரமாகிய காரணப்பொருளான் முத்தொழிற் படலுடைய; அதுபோல, உலகம் ஆதிபகவனாகிய காரணப் பொருளான் முத்தொழிற்படலுடைத்து. பொருளடை உவமைக்கு மெய்துமாகவிற் பகவனையடுத்துநின்ற ஆதியென்னும் அடையை அகரத்தொடுங் கூட்டி ஆதியாகிய அகரமென்க அகர முதல - ஆதி அகரமாகிய காரணத்தையுடையன வென்க. எழுத்தெல்லாம் எழுத்தின் வகைகள் எல்லாம் என்க. எழுத்து ஒலிவடிவெழுத்தும் வரிவடிவெழுத்தும் என இருவகைப்பட்டு அவை ஒவ்வொன்றும் பலவாகுமென்க. எழுத்து - தொழிற்பெயர். அஃதெழுதப்படுமியல்பினவாய ஒலிவடிவையும் வரிவடிவை யுமுணர்த்தலின் ஆகுபெயர். அது பால்பகாவஃறிணைப் பெயராதலின் ஈண்டு அதன் வகைகளாகிய பன்மையை யுணர்த்திற்று. ஆதிபகவன் முதற்று ஆதிபகவனாகிய காரணத்தையுடைத்தென்க. முதல்-காரணம். அஃது

அஃறிணையுட் பன்மையானும் ஒருமையானும் முதலவென்றும் முதற்றென்றும் ஆயிற்று. உலகென்பது உயிரும் உயிரல் பொருளுமென இருபாற்றாகிய பிரபஞ்சத்தொகுதி. ஆதி அகரமாவது, அகரவுயிர்க்கும் உயிராய்ச் செவியிற் கேட்கப்படுதலு மெழுதப்படுதலுமின்றி நாதமாத்திரையான் அகத்திசைக்குமொலியாம். அகரமாகியது செவியிற்கேட்கப் படுதலும் எழுதப்படுதலுமுடைத்தாய்ப் புறத்திசைத்து உயிர்வருக்கத்துள் முதலாவதாக நின்ற அகரவுயிராம். எழுத்தென்றது தமிழேயன்றி வடமொழி முதலாய மொழிகளினுஞ் செவியிற் கேட்குமாறு புறத்திசைத்துப் பலப்பலவாக வழங்கும் அகரவுயிர் முதலாய எழுத்துக்களை. இங்ஙனமொலி இருவகையாதலை ஆசிரியர் தொல்காப்பியர்.

அகத்தெழு வளியிசை அரிறப நாடி
யளபிற்கோட லந்தணர்மறைத்தே
யஃதிவணுவலா தெழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளியிசை யளவு நுவன்றிசினே.

எனக் கூறுமாற்றானறிக.

- தொடரும்

# மதிப்புரை

**நூல் : க.நா.சுப்பிரமணியம் இந்திய இலக்கியச்சிற்பிகள்**

ஆசிரியர் : தஞ்சைபிரகாஷ்.

விலை : ரூ 25

சாகித்திய அகாதமி, இந்திய இலக்கியச்சிற்பிகள் வரிசையில் க.நா.சுப்ரமணியம் அவர்களின் வாழ்வும் படைப்பும் குறித்த நூல் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன் ஆசிரியர் தஞ்சை பிரகாஷ் பாராட்டுக்குரியவர்.

மணிக்கொடிகாலம் தொடங்கி பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகத்தில் க.நா.சு.பணியாற்றிய காலம்வரை அவர் வாழ்க்கைப் பாதையில் சந்தித்த அனுபவங்களை நிரல்பட சுவைததும்ப விவரித்துள்ள அருமை உணர்வுப்பூர்வ மானது. இந்நூலிலிருந்து மாணவர்கள் கற்றுக்கொள்ளவேண்டிய வாழ்க்கைச் செய்திகள் பல அவற்றுள் சில:

"பத்திரிக்கை நண்பர்களின் கதைக்குதவாத உபதேசங்களும் உதவியற்ற அறிவுரைகளும் அவருக்கு ஏற்கனவே பழக்கமானதுதான். ஆதலினால் அதுபற்றியும் அவர் அஞ்சாமல் மென்மேலும் தனது பணிகளிலேயே ஊக்கமாக முயன்றார்"

"உழைப்பதும் உழைப்பதை விற்பதும் வேறுதுறைகளில் சுலபமாக இருக்கலாம். ஆனால் எழுத்துத்துறையில் அப்படி அல்ல. வயிற்றெரிச்சலும், மதமாச்சரியங்களும் இனப்பண்புகளும் பொறாமைச் சழக்குகளும் நெருங்கியடித்துக் கொண்டிருந்த இடம் அது"

மேலே குறிப்பிட்ட செய்திகள் க.நா.சு.தொடர்புடையதாக இருந்தாலும் எக்காலத்துக்கும் எல்லோருக்கும் உரிய எச்சரிக்கையாகவே கொள்ளலாம்.

"நண்பர்கள் எனும் எதிரிகளோடும், ஆதரவாளர்கள் எனும்

அயோக்கியர்களோடும் க.நா.சு.வாழ்ந்துவந்தார்." என்ற வரிகள் க.நா.சு.வின் வாழ்க்கைப் போராட்டத்தையும் எதிர் நீச்சலையும் கற்போர் உள்ளத்தில் சிந்திக்கத் தூண்டுகிறது.

"ஊருக்கு உவக்காததைச் சொல்ல

........................................................................

எனக்குமட்டுமே தெரியும்

ஊருக்கு உவக்காததைச் சொன்னவர்

பரம்பரை பெரிது காண்! என்ற வரிகள் உலகளந்த பெருமிதத்தை எடுத்துரைக்கிறது.

புதுமைப்பித்தன், வா.ரா.போன்றோர் தொடர்பால் க.நா.சு.பெற்ற சுவையான அனுபவங்கள்; காலணா இல்லை என்றாலும் நல்லினத்தால் பெற்ற நகைச்சுவையும் நயமான வாழ்வும் இன்ப உணர்வும் கற்போர் உள்ளத்தை கனக்க வைக்கிறது.

க.நா.சு. உலகந்தழுவிய ஆசிரியர். சிலப்பதிகாரம் முதலான தமிழ் இலக்கியங்களை மேலைநாட்டு மொழிகளில் மொழி பெயர்த்து அருந்தொண்டு ஆற்றியவர். உலக மொழிகள் பலவற்றில் உள்ள சிறந்த நூல்களைத் தமிழில் தந்த நல்லறிஞர், விமரிசனக்கலைஞர், கவிஞர், நாவலாசிரியர், சிறுகதை ஆசிரியர், புதுவைப்பல்கலைக்கழகப் பேராசிரியர் எனப் பல்வகைச் சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்ட க.நா.சு. 80 ஆண்டுகள் குறிக்கோளோடு வாழ்ந்த பெரிய வாழ்க்கையை ஆசிரியர் தஞ்சைப்பிரகாஷ் உணர்வுப் பூர்வமாகப் படைத்திருக்கிறார். தமிழ் உலகம் க.நா.சு.வின் அருமை உணர்ந்து பெருஞ்சிறப்புச் செய்திருக்க வேண்டும். செய்யவில்லை என ஆதங்கப்படும் ஆசிரியர், க.நா.சு. வின் இறுதிச்சடங்கில் இந்தியக் குடியரசுத்தலைவர் கலந்துகொண்டார் என்று எடுத்துரைத்து நாட்டின் தலைவர் அவரைப்போற்றிச் சிறப்பித்ததை எடுத்துரைத்துள்ளது கற்போர்க்கு ஒரு வகையில் மனத்திற்கு இதம் அளிக்கிறது. தமிழ் மாணவர்கள் தவறாது கற்கவேண்டிய அரியநூல்.

*இரா. சதாசிவம்*

# மதிப்புரை

நூல்: மு.வ.இந்திய இலக்கியச்சிற்பிகள்
ஆசிரியர் பொன்.சௌரிவாசன்

சாகித்திய அகாதெமி, இந்திய இலக்கிச்சிற்பிகள் வரிசையில், பேராசிரியர் மு.வ.வின் வாழ்வும் இலக்கியப்பணியும் குறித்து மிகத்தெளிவாக நூற்று இருபது பக்கத்தில் நூல் வெளியிட்டுள்ளது. நூலாசிரியர் பொன். சௌரிராசன் வாழ்த்துக்கும் பாராட்டுக்கும் உரியவர்.

வடஆர்காடு மாவட்டம் வேலம் என்னும் சிற்றூரில் பிறந்து வளர்ந்த மு.வ. தம் கூர்த்த மதியாலும் இனிய பழக்க வழக்கங்களினாலும் அயரா உழைப்பாலும் சென்னையில் புகழ்மிக்க பேராசியராக, இலக்கியச்சிற்பியாக, திறனாய்வாளராக ஆராய்ச்சி அறிஞராக, மொழிநூல் அறிஞராகப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக வாழ்வில் உயர்ந்து விளங்கிய மாண்பை நூல் நயம்பட விளக்குகிறது.

அவர் வாழ்வும் எழுத்தும் இளைஞர்களுக்கு வாழ்க்கைக் கலையைக் காட்டும் இலக்கியக் கண்ணாடி என்பதை நூலாசிரியர் சிறப்புற விளக்கியுள்ள திறம் பாராட்டுக்குரியது.

இறுதியாக பேராசிரியர் மு.வ. "நல்வாழ்வு" என்னும் நூலில் தான் நடந்து வந்த பாதையைப் பத்துக்கட்டளையாகப் பகுத்திருப்பதை நூலாசிரியர் "*வழிபாடு, நம்பிக்கை, உடம்பைப் போற்றல், எளிமை ஓர் அறம், உரிமையும் கடமையும், புலனடக்கம், மனவலிமை வேண்டும், பண்பாடு, பொதுமை அறம், பிறவிப் பெருங்கடல் நீந்துக*" *எனக் குறித்திருப்பது கற்பவர் அனைவரும் மனத்தில் கொள்ளவேண்டிய வாழ்க்கை நெறியாகும்.*

மு.வ.எளிய இனிய தூய தமிழ் நடையால் கற்பவர் உள்ளம் கவர்ந்தவர்; ஆங்கிலச் சொற்களைக் கற்போர் சிந்தை இனிக்கும் வகையில் தமிழ்ப்படுத்தும் நல்லறிஞர்; சென்னையில் "பாரீஸ்கார்னர்," "ஹார்பர்" எனப்பொதுமக்கள் வழக்கில் இருந்த அனைத்துச் சொற்களையும், "பாரிமுனை", "துறைமுகம்", எனச் சிந்தை இனிக்கச் செவி இனிக்கத்தமிழ் வழக்கில் கொண்டு வந்தவர், நல்லறிஞர் மு.வ. ஆனால் அவருடைய மாணவரும் நூலாசிரியருமான பொன்.சௌரிராசன் நூலின் தொடக்கத்தில் "தாலுகா", "ரெவின்யூ" போன்ற சொற்களைத் தமிழ்ப்படுத்தாமல் அப்படியே நூலில் கையாளுவதைத் தவிர்த்திருக்கலாம்.

இந்நூல் மு.வ.குறித்த அனைத்துச் செய்திகளையும் அவருடைய நூல் குறித்த அனைத்துக் கூறுகளையும் தொகுத்துத் திறம்பட வழங்கியுள்ளது போற்றுதற்குரியதாகும்.

*இரா.சதாசிவம்*

# மதிப்புரை

நூல்: விந்தன்
ஆசிரியர் :மு. பரமசிவம்
சாகித்திய அகாதெமி வெளியீடு:

இப்புதிய படைப்பு, தமிழ்த் தாய்க்கோர் மணியாரம். தோழமைப் பிடிப்போடு மு.பரமசிவம் அவர்கள் விந்தனை ஆராய்ந்துள்ளார்.

விந்தனின் இலக்கியக் கொள்கையான "இருப்பவனைப் பற்றி எழுதி அவன் பணத்துக்கு உண்மை இரையாவதை விட, இல்லாதவனைப் பற்றி எழுதி அவன் அன்புக்கு இரையாவதே மேல்" என்பதில் ஈர்க்கப்பட்டு ஆசிரியர் மு.பரமசிவம் இனம் இனத்தையே சார்ந்துள்ளமையை வியப்பதற்கில்லை.

அமரர் கல்கி, "எதை எழுதினாலும் அதை நாலுபேர் பாராட்டவாவது வேண்டும் அல்லது திட்டவாவது வேண்டும். இரண்டும் இல்லையென்றால் எழுதுவதை விட எழுதாமல் இருப்பது நன்று". என வழங்கிய அறிவுரையின்படி போற்றுவோர் போற்றவும், புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றவும் தொடர்ந்த விந்தனின் இலக்கியப் பணியில் ஆசிரியர் மு.பரமசிவம் கொண்ட ஈடுபாட்டை விந்தனின் படைப்புக்களை வகுத்துத் தொகுத்தளித்துள்ளமை பறை சாற்றுகிறது.

பணக்காரன், ஏழை, முதலாளி, தொழிலாளி, ஆடவர், மகளிர், சிறுவர், விலங்கு, ஆன்றோர், சான்றோர் என இதழைச் சுற்றி விந்தனின் சிந்தனைகள் வெளிச்சமிட்ட வேதனைகளையே சாதனையாக்கிக் காட்டியுள்ளார் ஆசிரியர். 'டீன் ஏஜ்' கதைகள் கூட விந்தனின் கைகளிலே விரசமின்றி வித்தியாசமாகவும்,

காதலிலும் பட்டுக்கோட்டையார் சமுதாயச் சிந்தனையோடு பாடியது போல வெளிப்படுகிறது. பட்டுக்கோட்டையார் போலவே சமுதாயத்தில் அக்கறை கொண்டு அல்லல்பட்ட வாழ்க்கையையே உடைமையாக்கிக் கொண்ட விந்தன் சேற்றில் முளைத்த செந்தாமரை.

பெண் முன்னேற்றத்தை வற்புறுத்தினாலும் மறுமணத்தை ஏற்றுக் கொள்ளாத காந்தியவாதி விந்தன் என்பதையும் சொல்லாமலில்லை. காலம் காலமாக வந்த தமிழ்ப் பண்பாடு - மரபுகளில் அழுத்தமான நம்பிக்கை உள்ளவர் என்பதையும் விளக்கிக் காட்டியுள்ளார் மு.பரமசிவம்.

விந்தன் சமூக விரோதிகளை இனங்காட்டி, போலியான தமிழ்ப் பண்பாட்டைத் தோலுரித்துக் காட்டிச் சிரித்தவர்களையும் சிந்திக்கும்படி செய்து, மறுப்புச் சிந்தனையே மறுமலர்ச்சி இலக்கியத்திற்கு நல்ல அடையாளம் என்ற கருத்தே அவர்தம் மூச்சாக இருந்ததென்பதையும் விளக்கி எழுதியுள்ளார்.

- தனலெட்சுமி நடராஜன்

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 341116